சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 14.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 57/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | கங்காதரன் |
| தந்தை பெயர் | : | சம்பந்தம் |
| கிராமம் | : | கடுவங்குடி |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | எலக்ட்ரிசியன் |
| வயது | : | 52 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1, 4 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி வேறு வழக்கில் காவலில் உள்ளார். PT warrant மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகியுள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் எலக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரியை மட்டும் எனக்கு தெரியும். இந்த வழக்கு விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எங்கள் ஊரை சேர்ந்த சாமிநாதன் எப்படி இறந்தார் என்றால் யாரோ கொலை செய்துவிட்டார்கள். நான் அதை கேள்விபட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எப்போதாவது விசாரணை செய்தார்களா என்றால் 2011 ஆம் ஆண்டு மேற்படி சாமிநாதன் இறந்துபோன பிறகு 2 நாட்கள் கழித்து கொல்லுமாங்குடி கிராமத்தில் இரவு 11.00 மணியளவில் டீ குடிக்க போய்விட்டு வந்தேன். அப்போது போலீசார்இரவு நேரத்தில் எங்கு போய் வந்தாய் என்று கேட்டார்கள். என்னிடம் ஒரு கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் இரண்டு பேப்பரில் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். இந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 10.07.2011-ம் தேதி கடுவங்குடி அக்ரஹாரத்தெருவில் சாமிநாதன் என்பவர் கொலை செய்யபட்டுவிட்டதாக கேள்விப்பட்டேன் என்றும், அன்றைய தினம் இரவில் சம்பவ இடத்திற்கு நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு

மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாயவும், அந்த மகஜரில் நானும், அ.சா-7 ஸ்டாலின் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளேம் என்று சொன்னால் சரியல்ல. மேலும் அன்று இரவே சம்பவ இடத்தில் இருந்து இரத்தம் கரை படிந்த மண் சிறிதளவையும் மற்றும் இரத்தம் கரை படியா மண் சிறிதளவிலும் மாதிரிகளாக சேகரித்து மகஜர் ஒன்று தயார்செய்ததாகவும், அந்த மகஜரில் நானும், அ.சா-7 ஸ்டாலின் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.14 18:24:29 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.